**ஆகஸ்ட் – 04**

# TNPSC துளிகள்

- ஜம்மு மற்றும் காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் 43 நாட்கள் நடைபெறும் மச்செயில் மாதா யாத்திரையானது பாதுகாப்பு காரணங்கள் கருதி ரத்து செய்யப்பட்டது.
    - மச்செயில் மாதா என்பது இந்தியாவில் ஜம்முப் பிராந்தியத்தின் கிஷ்த்வார் மாவட்டத்தில் மச்செயில் என்னுமிடத்தில் அமைந்துள்ள துர்கா தேவி கடவுளின் சிலையாகும்.
- பாங்காங்கில் நடைபெற்ற மீகாங் கங்கை ஒத்துழைப்பு அமைப்பின் 10-வது அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் S.ஜெய்சங்கர் இந்த அமைப்பின் மற்ற உறுப்பினர் நாடுகளுக்கும் இந்தியாவிற்கும் இடையே சிறந்த இணைப்பை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.
    - இது இந்தியாவையும், கம்போடியா, லாவோஸ், மியான்மர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய ஐந்து ஆசியான் நாடுகளையும் உள்ளடக்கிய ஒரு துணைப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பாகும்.
- நமது சூரியக் குடும்பத்திலிருந்து 31 ஒளி வருடங்கள் தள்ளி இருக்கின்ற சூப்பர் பூமியைப் போன்ற GJ 357-d என்ற கிரகத்தை நாசாவின் வெளிக்கோள்களை ஆய்வு செய்ய சுற்றி வரும் செயற்கைக்கோள் கண்டுபிடித்து இருக்கின்றது.
- பாங்காங்கில் நடைபெற்ற தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் இரட்டையர் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி இருவரும் இணைந்து நடப்பு உலகச் சாம்பியன்களான லி ஜீன் ஹீயு மற்றும் லியு யுசென் இணையைத் தோற்கடித்து உலக சாதனை படைத்துள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## நீலகிரியில் தண்ணீர் ஏடிஎம்கள்

- நீலகிரி மாவட்ட நிர்வாகம் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரபலமான 70 இடங்களில் தண்ணீர் ஏடிஎம்களை நிறுவி இருக்கின்றது.
- நீலகிரி முழுவதிலும் இருக்கும் நெடுஞ்சாலைகளில் குடிநீர் மற்றும் குளிர்பானங்கள் அடைக்கப்படும் நெகிழிப் புட்டிகளின் விற்பனை மீதான தடை ஆகஸ்டு 16 முதல் நடைமுறைக்கு வர இருக்கின்றது.
- சுற்றுலாப் பயணிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் இவ்வகையான ஏடிஎம்களில் இருந்து நீரைப் பெற முடியும்.




# தேசியச் செய்திகள்

## மரபணு இந்தியா முயற்சி

- மரபணு இந்தியா முயற்சி என்ற திட்டத்தின் கீழ் உயிரி தொழில்நுட்பத் துறை அடுத்த ஐந்து வருடங்களில் இரண்டு கட்டங்களாக ஏறக்குறைய 20000 இந்திய மரபணுக்களை சோதித்துப் பார்க்க திட்டமிடுகின்றது.
- இத்திட்டம் புற்று நோயைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் சோதனை முயற்சிகளை மேம்படுத்த மேற்கொள்ளப் படுகின்றது.
- இத்திட்டத்தில் உயிரி-தொழில்நுட்பத் துறையும், இந்திய அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மையத்தையும் சேர்த்து மொத்தம் 22 நிறுவனங்கள் பங்கேற்கும்.
- இவ்வாறு உருவாக்கப்படும் தகவல் தேசிய உயிரியல் தகவல் மையத்தின் மூலம் எங்கு வேண்டுமென்றாலும் ஆராய்ச்சியாளர்களுக்கு அணுகிடத் தக்க வகையில் இருக்கும்.

## பாலியல் கொடுமைகளிடமிருந்து சிறார்கள் பாதுகாப்பு மசோதா – 2019


- போக்சோ எனப்படும் பாலியல் கொடுமைகளிலிருந்து சிறார்கள் பாதுகாப்பு மசோதா, 2019 பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டின் போக்சோ (POCSO - Protection of Children from Sexual Offences) சட்டத்தில் திருத்தம் செய்கின்றது.

| குற்றம் | 2012 போக்சோ சட்டம் | 2019 மசோதா |
|---|---|---|
| ஆபாச புகைப்படங்கள் மற்றும் காட்சிகளுக்காக குழந்தைகளைப் பயன்படுத்துதல் | அதிகபட்சம் 5 வருடங்கள் | குறைந்தபட்சம் 5 வருடங்கள் |
| ஆபாச காரணங்களுக்காக குழந்தைகளைப் பயன்படுத்தி அதனால் ஊடுருவும் (உள்ளேப் புகுத்தும்) வகையிலான பாலியல் தாக்குதல் | குறைந்தபட்சம் 10 வருடங்கள்<br>அதிகபட்சம் ஆயுள் தண்டனை | குறைந்தபட்சம் 10 வருடங்கள் (குழந்தை 16 வயதிற்கு கீழே இருந்தால் 20 வருடங்கள்)<br>அதிகபட்சம் ஆயுள் தண்டனை |
| ஆபாச காரணங்களுக்காக குழந்தைகளைப் பயன்படுத்தி அதனால் மிக மோசமான | ஆயுள் தண்டனை | குறைந்தபட்சம் 20 வருடங்கள்<br>அதிகபட்சம் ஆயுள் |

| | | |
|---|---|---|
| ஊடுருவும் (உள்ளேப் புகுத்தும்) வகையிலான பாலியல் தாக்குதல் | | அல்லது மரண தண்டனை |
| ஆபாச காரணங்களுக்காக குழந்தைகளைப் பயன்படுத்தி அதனால் பாலியல் தாக்குதல் | குறைந்தபட்சம் 6 வருடங்கள் அதிகபட்சம் 8 வருடங்கள் | குறைந்தபட்சம் 3 வருடங்கள் அதிகபட்சம் 5 வருடங்கள் |
| ஆபாச காரணங்களுக்காக குழந்தைகளைப் பயன்படுத்தி அதனால் மிக மோசமான பாலியல் தாக்குதல் | குறைந்தபட்சம் 8 வருடங்கள் அதிகபட்சம் 10 வருடங்கள் | குறைந்தபட்சம் 5 வருடங்கள் அதிகபட்சம் 7 வருடங்கள் |

## கருங்காய்ச்சல் நோய்

- ஹைதராபாத் ஐஐடியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் காலா அசார் எனப்படும் கருங்காய்ச்சலை குணப்படுத்த பயன்படுத்தப்படும் மருந்தை (அம்போடெரிசின் டி) 10 நாட்கள் வரை மெதுவாக செலுத்துவதைச் சாதிக்க முனைந்திருக்கின்றனர்.
- இது லெயிஸ்மானியா வகையின் ஒட்டுண்ணிகளால் உருவாக்கப்படும் ஒரு நோயாகும்.
- இது பாதிக்கப்பட்ட பெண் இனத்தின் மண் ஈக்களின் கடியால் பரப்பப்படுகின்றது.
- நோய் எதிர்ப்பு சக்தியைத் தாக்குகின்ற இந்நோய் முறையாகச் சிகிச்சையளிக்கப் படாவிடில் ஏறக்குறைய அபாயகரமானதாகும்.
- இது மலேரியாவிற்குப் பிறகு உலகில் இரண்டாவது மிகப்பெரிய ஒட்டுண்ணிக் கிருமியாகும்.
- கருங்காய்ச்சல் என்றும் அழைக்கப்படும் காலா அசார் மற்றும் டம்டம் காய்ச்சல் ஆகிய இரண்டும் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள் என்று வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன.
- இந்தியாவில், இந்த நோய் மேற்கு வங்காளம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் மட்டுமே காணப்படுகிறது.



## சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு (திருத்தம்) மசோதா – 2019

- பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளும் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு (திருத்தம்) மசோதாவை நிறைவேற்றி இருக்கின்றன.
- இது 1967ம் ஆண்டின் UAPA (Unlawful Activities (Prevention) Act) சட்டத்தைத் திருத்தம் செய்கின்றது.
- சில அமைப்புகளையும் தீவிரவாத அமைப்புகளாக நிர்ணயிக்கப்படுவதையும் சேர்த்து இம்மசோதா தனிநபர்களையும் தீவிரவாதிகளாக சித்தரிக்க அரசிற்கு அனுமதி அளிக்கின்றது.
- முன்னதாக வழக்குகளின் விசாரணை காவல்துறையின் இணை கண்காணிப்பாளர் அல்லது காவல்துறையின் துணை ஆணையர் அல்லது அதற்கும் மேல் தகுதிநிலை கொண்ட அதிகாரிகளாலேயே நடத்தப்பட்டு இருக்கும்.
- இம்மசோதா கூடுதலாக அவ்வகையிலான வழக்குகளை தேசிய விசாரணை அமைப்பின் ஆய்வாளர் அல்லது அதற்கும் மேல் தகுதிநிலை கொண்ட அதிகாரிகள் விசாரிக்க அனுமதி அளிக்கின்றது.
- முன்னதாக தீவிரவாதிகளின் வெடிகுண்டுத் தாக்குதல்களைக் தடுத்தல் ஒப்பந்தம் (1997) மற்றும் பிணைக் கைதிகளாக்கும் செயலுக்கு எதிரான ஒப்பந்தம் (1979) உள்ளிட்ட 9 ஒப்பந்தங்களுக்கு எதிரான செயல்கள் தீவிரவாதச் செயல்களாக சித்தரிக்கப்பட்டன.
- இந்த திருத்தம் மேலும் ஒரு ஒப்பந்தமாக, அணு ஆயுதத் தீவிரவாதச் செயல்களைத் தடுப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தையும் (2005) உள்ளடக்குகின்றது.
- 1967ம் ஆண்டுச் சட்டத்தின் படி ஒரு விசாரணை அதிகாரி தீவிரவாதத்தோடு தொடர்புடையதாக கருதப்படும் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய டிஜிபியின் முன் அனுமதியைப் பெறுவது கட்டாயத் தேவையாக இருக்கின்றது.
- தற்பொழுது இவ்விசாரணை தேசிய விசாரணை அமைப்பின் அதிகாரியால் மேற்கொள்ளப்படுமெனில் தேசிய விசாரணை அமைப்பின் பொது இயக்குனரிடமிருந்து இத்தகையச் சொத்துக்களைக் கைப்பற்ற அனுமதி பெற வேண்டியிருக்கும் என இத்திருத்தம் சொல்கின்றது.

## உயர்புகழ் (மாண்புமிகு) நிறுவனங்கள்

- 2019ம் ஆண்டு ஆகஸ்டு 2ம் தேதி பல்கலைக்கழக மானியக் குழு 20 கல்வி நிறுவனங்களுக்கு உயர்புகழ் நிறுவனங்கள் என்ற தகுதி வழங்கப்பட பரிந்துரை செய்திருக்கின்றது.
- இந்த 20 கல்வி நிறுவனங்களில் மதராஸ் ஐஐடி, கரக்பூர் ஐஐடி, டெல்லிப் பல்கலைக்கழகம், ஹைதராபாத் பல்கலைக்கழகம், அம்ரிதா விஸ்வ வித்யா பீடம் மற்றும் விஐடி உள்ளிட்டவை அடங்கும்.
- 2018ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், இந்தியாவை உலக கல்வி வரைபடத்தில் வைக்கும் வகையில் 20 உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை மேம்படுத்துவதை எண்ணுகின்றது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு கல்வி நிறுவனங்கள் 1000 கோடி ரூபாயை அரசு நிதியாகப் பெறும். அதேவேளையில் இதில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்கள் இத்திட்டத்தின் கீழ் எவ்வித நிதியையும் பெறாது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா – ஆப்பிரிக்கா உறவுகள்

- பெனின், காம்பியா மற்றும் கினியா ஆகிய மூன்று ஆப்பிரிக்க நாடுகளின் சுற்றுப்

பயணத்திற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் புதுதில்லி திரும்பினார்.

- இந்த மூன்று மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு இந்தியாவின் எந்த ஒரு குடியரசுத் தலைவராலும் மேற்கொள்ளப்பட்ட முதல் பயணம் இதுவேயாகும்.
- கினியாவில் அவர் அந்நாட்டின் மிக உயரிய குடிமையியல் விருதான தேசிய மரியாதைக்குரிய ஆணையைப் பெற்றார்.
- பாரம்பரிய மருத்துவம், ஆப்பிரிக்கா முழுமைக்கான மின்னணு இணையத் திட்டம், சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மின்னணு கல்வி மற்றும் ஆயுர்வேதா ஆகிய துறைகளில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- ஆப்பிரிக்கா முழுவதுமான மின்னணு இணையத் திட்டம் :
    - இது 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆப்பிரிக்க நாடுகளை இணைப்பதற்காக ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட உயர்தர, கண்ணாடி இழைகளாலான மற்றும் கம்பிகளற்ற வலையமைப்பை உருவாக்கிட எண்ணுகின்றது.
    - இத்திட்டத்திற்கான யோசனை 2004 ஆம் ஆண்டில் அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவரான ஏ.பி.ஜே. அப்துல் கலாமிடமிருந்து வந்தது.

## அமெரிக்கா – ரஷ்யா இடைநிலை வரம்புடைய தனது ஆயுதப் படைகள் ஒப்பந்தம்

- பனிப்போர் காலத்திய ஒப்பந்தமான இடைநிலை வரம்புடைய அணு ஆயுதப் படைகள் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா முறையாக வெளியேறி இருக்கின்றது.
- இந்த ஒப்பந்தம் 500 முதல் 5000 கிலோமீட்டர் வரையிலான வரம்புடன் குறுகிய தூர மற்றும் நடுத்தர தூர அளவிலான தரையிலிருந்து ஏவப்படும் அணு ஆயுத ஏவுகணைகளின் சோதனை, தயாரிப்பு மற்றும் கையிருப்பு ஆகியவற்றைத் தடை செய்திருந்தது.
- இந்த ஒப்பந்தம் 1987ம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் மற்றும் சோவியத் தலைவர் மிக்கைல் கோர்பச்சேவ் ஆகியோரால் கையொப்பமிடப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## BS VI விதிமுறைகள் விலக்களிப்பு

- தரைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் ஆயுதந் தாங்கிய வாகனங்கள் மற்றும் ஆயுத/துணை ராணுவப் படைகளின் சிறப்பு வாகனங்கள் ஆகியவற்றிற்கு பாரத் விதிமுறைகள் VI (Bharat Stage VI) என்ற உமிழ்வு விதிமுறைகளிலிருந்து விலக்கு அளித்து இருக்கின்றது.
- இதற்குத் தகுந்த BS VI இயந்திரங்களை உருவாக்குவதற்குத் தேவைப்படும் காலம் மற்றும் பாதுகாப்புக் காரணங்கள் ஆகியவற்றுக்காக இந்த விலக்கு அளிக்கப்பட்டு இருக்கின்றது.
- விலக்கு அளிக்கப்பட்ட மற்ற வாகனங்கள்
    - நாட்டின் பாதுகாப்பு தொடர்பான அரசு காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள்.
    - உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு மேலாண்மை ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்படும் ஆயுதம் தாங்கிய வாகனங்கள்.

## நாயிடமிருந்துப் புலிகளுக்கு கேனைன் கிருமி

- வனவுயிர் ஆர்வலர்கள் மற்றும் உயிரியலாளர்கள் கேனைன் கிருமியைப் பற்றிய கவலையை எழுப்பி உள்ளனர்.
- இது வனவிலங்குச் சரணாலயங்களில் வசிக்கும் கேனைன் கிருமி பாதிக்கப்பட்ட நாய்களிடமிருந்து புலிகளுக்குப் பரவிட சக்தியுள்ள ஒரு கிருமியாகும்.
- இது பாரமைக்சோவிரிடே எனப்படும் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஒற்றையாகத் தனித்திருக்கும் RNA கிருமியால் பரப்பப் படுகின்றது.
- இது மனிதர்களில் இருக்கும் தட்டம்மை கிருமியைப் போன்றே இருக்கும்.
- கேனைன் கிருமித் தாக்குதலுக்கு எவ்வித சிகிச்சையும் கிடையாது
- 2018 ஆம் ஆண்டில் இந்த கிருமியின் தொற்று காரணமாக கிர் காடுகளிலில் 20-க்கும் மேற்பட்ட சிங்கங்கள் பாதிக்கப்பட்டு இறந்திருக்கின்றன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★